Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, செப்டம்பர் 05, 2026 | இதழ் 145

## முதலமைச்சர் விஜய்யின் புதிய அலுவலக பணிகள்: ரூ.3.78 கோடிக்கு டெண்டரை வென்றது ராசி பில்டர்ஸ்



சென்னை, 05 செப்டம்பர் 2026: தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யின் அலுவலகமானது நாமக்கல் கவிஞர் மாளிகையின் பத்தாவது மாடிக்கு மாற்றம் செய்யப்படுவதாக முடிவு செய்யப்பட்டு, அதற்காக சுமார் ரூ. 5 கோடி செலவில் பணிகளை மேற்கொள்வதற்கான டெண்டர் கோரப்பட்டது. அதன்படி, நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளமானது பிளாக் 1, பிளாக் 2, பிளாக் 3 என்று மூன்றாக பிரிக்கப்பட்டு இந்த டெண்டர் கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மூன்று டெண்டர்களுக்கும் ஒரே நிறுவனமானது குறைந்த தொகையை கோரியுள்ள நிலையில், அந்த நிறுவனத்திற்கு விரைவில் டெண்டர் வழங்கப்படவுள்ளது. டெண்டர் விதிமுறைகளின்படி இந்த நடவடிக்கையானது எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மூன்று டெண்டருக்கும் சேர்த்து ரூ.5.54 கோடிக்கு பொதுப் பணித்துறை எஸ்டிமேட் தயார் செய்துள்ளது. தற்போது அந்த நிறுவனமானது ரூ.3.78 கோடிக்கு அந்த டெண்டரைச் சமர்ப்பித்துள்ளது.

அதன்படி, அந்த நிறுவனத்திற்குப் பணி ஆணை வழங்கப்படவுள்ளது. பிளாக் ஒன்றுக்கு ரூ.2.41 கோடி மதிப்பிலான பணிக்கு ரூ.1.66 கோடியும், பிளாக் இரண்டுக்கு ரூ.2.01 கோடி மதிப்பிலான பணிகளுக்கு ரூ.1.37 கோடியும், பிளாக் மூன்றுக்கு ரூ.1.12 கோடி மதிப்பிலான பணிக்கு ரூ.74.94 லட்சம் தொகையும் அந்த நிறுவனம் டெண்டர் கோரியுள்ளது.

பொதுப்பணித்துறை நிர்ணயித்த தொகையை விட 32% சதவீதம் குறைவான தொகையை 'ராசி பில்டர்ஸ்' நிறுவனம் கோரியுள்ள நிலையில், இன்னும் இரண்டு நாட்களில் அந்த நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணி ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் முதலமைச்சரின் அலுவலக பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் முதலமைச்சர் அந்த புதிய அலுவலகத்திற்கு செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## முக்கிய மைல்கல்லை எட்டிய இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியை புகழ்ந்த பிரதமர் மோடி



சென்னை, 05 செப்டம்பர் 2026: இத்தாலி நாட்டில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக பிரதமர் பதவி வகித்து வருபவர் என்ற பெருமையை ஜார்ஜியா மெலோனி பெற்றுள்ளார். இதற்காக அவருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இத்தாலி நாட்டின் பிரதமராக ஜார்ஜியா மெலோனி(வயது 49) கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் 22-ந்தேதி பதவியேற்றார். தற்போது வரை இத்தாலியின் பிரதமராக பதவி வகித்து வரும் மெலோனி, இன்றோடு தொடர்ச்சியாக 1,414 நாட்கள் பதவியில் இருந்துள்ளார். இதன்மூலம், இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் நீண்ட காலம் தொடர்ச்சியாக இத்தாலியின் பிரதமராக பதவி வகித்தவர் என்ற பெருமையை ஜார்ஜியா மெலோனி பெற்றுள்ளார். அதோடு, இத்தாலியின் பிரதமராக பதவி வகிக்கும் முதல் பெண்ணும் அவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "போருக்குப் பிந்தைய இத்தாலியின் வரலாற்றில், மிக நீண்ட காலம் தொடர்ந்து பிரதமராக பணியாற்றும் பெருமையைப் பெற்றுள்ள எனது நண்பர் பிரதமர் மெலோனிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மைல்கல், அவரது தலைமையின் மீது இத்தாலி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், உறுதியான ஆதரவையும் பிரதிபலிக்கிறது.

இந்தியா-இத்தாலி இடையிலான சிறப்பு மூலோபாய கூட்டாண்மையை (Special Strategic Partnership) வலுப்படுத்துவதில் மெலோனியின் நட்பு முக்கிய பங்காற்றியுள்ளது. இரு நாட்டு மக்களுக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க தொடர்ந்து நெருக்கமாக இணைந்து பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்.

வரும் ஆண்டுகளிலும் அவர் தொடர்ந்து வெற்றி பெற எனது மனமார்ந்த வாழ்த்துகள்" என்று பிரதமர் மோடி பதிவிட்டு உள்ளார்.

## உக்ரைனுக்கு ஆயுதங்கள் வாங்குவதற்காக இந்திய நிறுவனத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ரூ.769 கோடி முறைகேடு: எஸ்தோனியா அமைச்சர் ராஜினாமா

சென்னை 05, செப்டம்பர் 2026: உக்ரைனுக்கு ஆயுதங்கள் வாங்குவதற்காக இந்திய நிறுவனத்துடன் செய்யப்பட்ட ரூ.769 கோடி ஒப்பந்த முறைகேடு காரணமாக, எஸ்தோனியா நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்யா 2022ம் ஆண்டு போரைத் தொடங்கியதில் இருந்தே, அந்நாட்டிற்கு ஐரோப்பிய நாடுகள் தீவிரமாக ராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில், ரஷ்யாவின் எல்லையை ஒட்டியுள்ள சிறிய ஐரோப்பிய நாடான எஸ்தோனியா, உக்ரைனுக்கு பீரங்கி குண்டுகளை கொள்முதல் செய்து வழங்க திட்டமிட்டது.

இதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் 2024ம் ஆண்டு இத்தாலியில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவின் 'நெகோ டிஃபென்ஸ் மியூனிஷன்ஸ்' நிறுவனத்திற்குச் சொந்தமான 'டேட்டா செல் எஸ்.ஆர்.எல்.' என்ற நிறுவனத்துடன் எஸ்தோனிய பாதுகாப்பு முதலீட்டு மையம் ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், சுமார் 7 கோடி யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.769 கோடி) முன்பணமாக அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால், பீரங்கி குண்டுகளை விற்பனை செய்ததில் எவ்வித முன் அனுபவமும் இல்லாத இந்த நிறுவனத்தால் உரிய நேரத்தில் ஆயுதங்களை வழங்க முடியவில்லை. மேலும், 2025ம் ஆண்டு சப்ளை செய்யப்பட்ட வெடிபொருட்களும் போதிய தரக்கட்டுப்பாட்டுடன் இல்லை என குற்றச்சாட்டு எழுந்தது.

இதனிடையே, எஸ்தோனிய தேசிய தணிக்கை அலுவலகம் மேற்கொண்ட ஆய்வில், ராணுவ அமைச்சகத்தின் நிதி பயன்பாடு மற்றும் ஆயுத கொள்முதலில் மிகப்பெரிய முறைகேடுகளும் குளறுபடிகளும் நடந்திருப்பது அம்பலமானது. இந்த நிதியை ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து மீட்டெடுக்க முடியாவிட்டால், எஸ்தோனிய அரசு தனது சொந்த பட்ஜெட்டில் இருந்து ரூ.769 கோடியை ஈடுகட்ட வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஹன்னோ பெவ்கூர் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'எஸ்தோனிய நாட்டின் பாதுகாப்பு என்பது தனிநபரின் விவகாரம் அல்ல; அது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும். எனவே பாதுகாப்புத் துறைக்கான முழு அரசியல் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு நான் பதவி விலகுகிறேன்' என்றார்.

மேலும் பாதுகாப்பு முதலீட்டு மையத்தின் தலைமை இயக்குனர் எல்மர் வாஹெர் கூறுகையில், 'முன் அனுபவம் இல்லாத நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தத்தை அளித்திருக்கவே கூடாது' என்று வேதனை தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் ஒப்பந்தத்தை எஸ்தோனிய அரசு ரத்து செய்துள்ள நிலையில், இந்திய நிறுவனம் மீது சர்வதேச நடுவர் மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து முன்பணத்தை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த கொள்முதல் ஊழல் ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், வரி செலுத்துவோரின் பணம் முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய ஐரோப்பிய ஆணையமும் எஸ்தோனிய அதிகாரிகளுடன் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளது.

## இஓஎஸ்-05 செயற்கைக்கோள் தாங்கிய ஜிஎஸ்எல்வி-எஃப்17 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்காக இஸ்ரோவிற்கு பிரதமர் வாழ்த்து



சென்னை 05, செப்டம்பர் 2026: இஸ்ரோவின் மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனையைப் பாராட்டியுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டிற்குப் பெருமைத் தேடித் தரும் தருணம் என்று இதை வர்ணித்தார்.

இந்தியாவின் முதல் புவி சுற்றுப்பாதை சார்ந்த படமெடுக்கும் இஓஎஸ்-05 செயற்கைக் கோளை சுமந்து சென்ற ஜிஎஸ்எல்வி-எஃப்17 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது, இந்திய விண்வெளித் துறையின் சிறப்பம்சம், புத்தாக்கம், வளர்ந்து வரும் திறன்களைப் பிரதிபலிப்பதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த விண்வெளிச் சூழலியலிலும் இந்தியாவின் திறன்களை விரிவுபடுத்தும் வகையில், இஸ்ரோவிற்கும் இந்திய தொழில்துறையினருக்கும் இடையே வளர்ந்து வரும் நட்புணர்வு, விண்வெளித் திட்டத்திற்கு புதிய ஆற்றலையும், விரிவான பரிமாணத்தையும் வழங்குவதாக திரு மோடி குறிப்பிட்டார்.

இஸ்ரோவின் இந்த வெற்றிக் குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பகிர்ந்ததாவது:

"இஸ்ரோவின் மற்றொரு சிறப்பான சாதனை மற்றும் நாட்டிற்கான பெருமைக்குரிய தருணம்.

இந்தியாவின் முதல் புவி சுற்றுப்பாதை சார்ந்த படமெடுக்கும் இஓஎஸ்-05 செயற்கைக் கோளை சுமந்து சென்ற ஜிஎஸ்எல்வி-எஃப்17 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது, இந்திய விண்வெளித் துறையின் சிறப்பம்சம், புத்தாக்கம் மற்றும் வளர்ந்து வரும் திறன்களைப் பிரதிபலிக்கிறது.

இஸ்ரோவிற்கும் இந்திய தொழில்துறையினருக்கும் இடையே வளர்ந்து வரும் நட்புணர்வு, விண்வெளித் திட்டத்திற்கு புதிய ஆற்றலையும், விரிவான பரிமாணத்தையும் வழங்குவதுடன், ஒட்டுமொத்த விண்வெளிச் சூழலியலிலும் இந்தியாவின் திறன்களை விரிவுபடுத்துகிறது."



# சென்னை நங்கநல்லூரில் கிருஷ்ண ஜெயந்தி விழா கோலாகலம்



சென்னை 05, செப்டம்பர் 2026: சென்னை நங்கநல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு அதிவ்யா திஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு இன்று சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு பெருமாளுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன. இந்த விழாவில் கலந்து கொண்ட திருக்கோயில் தக்கார் திரு. கோதண்டராமன் அவர்களுக்கு, திருக்கோயில் தலைமை பட்டாச்சாரியார் திரு. பார்த்தசாரதி தலைமையில் சிறப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

# நவம்பர் மாதம் முதல் கோயம்பேடு - நந்தம்பாக்கம் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்: மெட்ரோ அதிகாரிகள் தகவல்



சென்னை 05, செப்டம்பர் 2026: கோயம்பேடு முதல் நந்தம்பாக்கம் வரையிலான மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வரும் நவம்பரில் இருந்து தொடங்கப்பட உள்ளதாக மெட்ரோ அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். சென்னையின் வளர்ச்சி மற்றும் முக்கிய பகுதிகளை இணைக்கும் வகையில், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 3 வழித்தடங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 3வது வழித்தடம் 45.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாதவரம் பால் பண்ணை முதல் சிப்காட் வரையிலும், 4வது வழித்தடம் 26.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலும், 5வது வழித்தடம் 47 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையில் ரூ.63,246 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் 119 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கிறது. இந்தப் பணிகளை 2028ம் ஆண்டு இறுதிக்குள் முடித்து, மெட்ரோ ரயில்களை இயக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான 5வது வழித்தடத்தில் சுமார் 26 கி.மீ நீளமுள்ள கோயம்பேடு முதல் நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையம் வரை கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளது. மேலும் இந்த பாதையில் கிட்டத்தட்ட 90 சதவீத தண்டவாளப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 1.5 கி.மீ பணிகளை கோயம்பேடு நிலையம், முகலிவாக்கம் மற்றும் ஈரடுக்குப் பாதையில் சிறு சிறு பணிகள் நடைபெற்று வருகிறது. அடுத்த 10 நாட்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 90 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ளதால் கோயம்பேடு முதல் நந்தம்பாக்கம் வரை வரும் நவம்பரில் சோதனை ஓட்டம் தொடங்க மெட்ரோ நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மெட்ரோ அதிகாரி கூறுகையில் : கோயம்பேடு முதல் நந்தம்பாக்கம் வரையிலான மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வரும் நவம்பரில் இருந்து தொடங்கப்பட உள்ளது. இந்தச் சோதனை ஓட்டம், வணிகரீதியாக மக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்படுவதற்கு முன்பு சுமார் 4 மாதங்கள் வரை நீடிக்கும். மேலும் இந்த வழித்தடத்தில் அதிநவீன ஓட்டுநர் இல்லாத ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு மென்பொருள்கள் ரயில்களில் பொருத்தப்பட்டுத் தொடர் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. நந்தம்பாக்கம் வர்த்தக மையம் மற்றும் ஆலந்தூர் இடையிலான 3.6 கி.மீ இணைப்புப் பணிகள் இன்னும் 45 முதல் 60 நாட்களில் முடிக்கப்படும். இதனால் கோயம்பேடு - ஆலந்தூர் இடையிலான முழு வழித்தடப் பயன்பாடு அடுத்த ஆண்டு முதல் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தரையிறங்கிய இண்டிகோ விமானம் கம்பத்தில் மோதி விபத்து

சென்னை 05, செப்டம்பர் 2026: ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தரையிறங்கிய இண்டிகோ விமானம், அங்குள்ள கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இது தொடர்பாக அதிகாரிகள் கூறியது, நவி மும்பையிலிருந்து ஸ்ரீநகர் வந்த இண்டிகோ விமானம், ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்தில் தரைமிறங்கியது. அப்போது, விமான நிறுத்துமிடம் எண் 06ல் விமானம் நிறுத்தப்படும் போது, அங்குள்ள கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றனர். யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. மேலும், விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் செயல்பாடுகள் வழக்கம் போல் தொடர்ந்து நடந்து வருகிறது, கடந்த 24 மணி நேரத்தில் இண்டிகோ விமானம் சம்பந்தப்பட்ட 2வது சம்பவம் இதுவாகும். முன்னதாக, தோஹாவிலிருந்து பெங்களூரு நோக்கிச் சென்ற இண்டிகோ விமானம் விமானி ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் மஸ்கட்டுக்குத் திசை திருப்பப்பட்டு தரையிறக்கப்பட்டது.

# பிரமல் கன்ஸ்யூமர் ஹெல்த்கேர், லிட்டில்ஸ் ஏர்சென்ஸ் அல்ட்ரா-பிரீமியம் பேபி டயப்பர்களை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 05 செப்டம்பர் 2026: பிரமல் கன்ஸ்யூமர் ஹெல்த்கேர் இன்று, தனது முதன்மை குழந்தை பராமரிப்பு பிராண்டான லிட்டில்ஸின் கீழ், சமீபத்திய கண்டுபிடிப்பான லிட்டில்ஸ் ஏர்சென்ஸ் அல்ட்ரா-பிரீமியம் பேபி டயப்பர்களை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. “அக்கறையுடன் கூடிய அறிவியல்” என்ற பிராண்டின் முக்கிய தத்துவத்திற்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய லிட்டில்ஸ் ஏர்சென்ஸ் பேபி டயப்பர்கள், அறிவியல் துல்லியத்தை பெற்றோரின் நம்பிக்கை மற்றும் குழந்தையின் பாதுகாப்பு குறித்த ஆழ்ந்த புரிதலுடன் இணைத்து, மேம்பட்ட காற்றோட்டத்தை சிறந்த சரும சௌகரியத்துடன் சுருங்கிணைத்து, பிரீமியம் டயப்பர் பிரிவில் ஒரு புதிய அளவுகோலை அமைக்கிறது.

50 மில்லியன் சுவாசிக்கக்கூடிய துளைகளால் இயக்கப்படும் இந்த டயப்பர்கள், காற்றோட்டத்தை மேம்படுத்தவும், குழந்தையின் சருமத்தை புத்துணர்ச்சியாகவும் வசதியாகவும் வைத்திருக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஷியா பட்டர் செறிவூட்டப்பட்டு, தோல் மருத்துவ ரீதியாக சோதிக்கப்பட்ட இவை, குழந்தையின் மென்மையான சருமத்திற்கு இதமான பராமரிப்பை வழங்குகின்றன. அதே நேரத்தில், பபிள் லேயர் டெக்னாலஜி, குழந்தையின் சருமத்திற்கும் ஈரமான உள்ளகத்திற்கும் இடையில் ஒரு பாதுகாப்பு மெத்தையை உருவாக்கி, சருமத்தை மேகம் போன்ற மென்மையுடன் உலர்ந்த நிலையில் வைத்திருக்க உதவுகிறது. இந்த டயப்பர்களில், முழுமையான பாதுகாப்பிற்காக 360கு கசிவுத் தடுப்பு அம்சமும், பாரபென், தாலேட், ஆல்கஹால் மற்றும் குளோரின் இல்லாத தடிப்புத் தடுப்பு ஃபார்முலாவும் இடம்பெற்றுள்ளன. இதனால், எரிச்சல் ஏற்படும் அபாயம் குறைக்கப்படுகிறது.

இந்த அறிமுகம் குறித்துப் பேசிய பிரமல் கன்ஸ்யூமர் ஹெல்த்கேரின் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் அபிஷேக் குமார், “இன்றைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்காகத் தேர்ந்தெடுக்கும் தயாரிப்புகள் குறித்து அதிக விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். மேலும், மேம்பட்ட வசதி, பாதுகாப்பு மற்றும் கவனிப்பை வழங்கும் தீர்வுகளில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர். லிட்டில்ஸ் ஏர்சென்ஸ் பேபி டயப்பர்கள் மூலம், 50 மில்லியன் சுவாசிக்கக்கூடிய துளைகள் வழியாக மேம்பட்ட காற்றோட்டத்தையும், குழந்தையின் அன்றாட வசதியை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சிந்தனைமிக்க புதுமைகளையும் நாங்கள் ஒன்றிணைத்துள்ளோம். இதன் மூலம், மென்மையான, பாதுகாப்பான மற்றும் உணர்திறன் மிக்க 3எஸ் வாக்குறுதியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு தயாரிப்பை நாங்கள் வழங்குகிறோம். மேலும், குழந்தையின் வசதியை அனுபவத்தின் மையமாக வைக்கும் காற்றோட்டத்தை மையமாகக் கொண்ட புதுமைகளின் மூலம் அன்றாட பூயப்பர் பயன்பாட்டை நாங்கள் மறுவடிவமைக்கிறோம், ” என்றார். நம்பகமான சருமப் பராமரிப்பு நிபுணத்துவத்தை, குழந்தைகளை வசதியாகவும், புத்துணர்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதோடு, பெற்றோர் வளர்ப்பை எளிதாக்கும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளுடன் இணைப்பதன் மூலம், குழந்தை சுகாதாரப் பிரிவில் அர்த்தமுள்ள புதுமைகளை வழங்குவதற்கான பிரமல் கன்ஸ்யூமர் ஹெல்த்கேரின் உறுதிப்பாட்டை இந்த அறிமுகம் மேலும் வலுப்படுத்துகிறது.

# சோனியா காந்தியின் சுயசரிதை புத்தகத்தை வெளியிடுவதாக ஹார்பர் காலின்ஸ் அறிவிப்பு..!!




சென்னை 05, செப்டம்பர் 2026: சோனியா காந்தியின் சுயசரிதை புத்தகத்தை வெளியிடவுள்ளதாக ஹார்பர் காலின்ஸ் பதிப்பக நிறுவனம் அறிவித்துள்ளது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி அவரது சுயசரிதையை 'பிலாங்கிங்: ஏ ஜர்னி ஆஃப் லவ்' என்ற 544 பக்க புத்தகமாக எழுதியுள்ளார். இந்த புத்தகத்தில், சோனியா காந்தி இத்தாலியில் இருந்தபோதான ஆரம்பகால வாழ்க்கை குறித்தும், 19ஆவது வயதில் பிரிட்டனில் வைத்து ராஜீவ் காந்தியை காதலித்தது, 3 ஆண்டுகளுக்குப் பின் அவரை திருமணம் செய்து கொண்டு இந்தியாவுக்கு வந்து அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியின் மருமகளாக மாறியது குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

இந்த புத்தகம் வருகிற நவம்பர் 10 அன்று வெளியாகும் என உலகப் புகழ்பெற்ற புத்தகப் பதிப்பக நிறுவனமான பெங்குவின் ரேண்டம் ஹவுஸ் நிறுவனத்தின் ஒரு அங்கமான ஆல்பிரட் ஏ நோப் பதிப்பகம் வெளியிடுவதாக அறிவித்திருந்தது. ஆனால், புத்தகத்தில் சில மாற்றங்களைச் செய்து, சில பகுதிகளை நீக்குமாறு பதிப்பகம் சார்பில் வைத்த கோரிக்கைக்கு சோனியா காந்தி மறுப்புத் தெரிவித்ததால் அந்நிறுவனம் புத்தகத்தை பதிப்பிக்க மறுத்து விலகியது.

இதனை தொடர்ந்து, சோனியா காந்தியின் சுயசரிதை புத்தகத்தை வெளியிட அமெரிக்காவை சேர்ந்த உலகப் புகழ்பெற்ற 'ஹார்பர் காலின்ஸ்' நிறுவனம் ஒப்புக் கொண்டதாகத் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், இன்று அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை 'ஹார்ப்பர் காலின்ஸ் இந்தியா' நிறுவனம் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. இது தொடர்பான பதிவில், சோனியா காந்தி எழுதிய 'பிலாங்கிங்: ஏ ஜர்னி ஆஃப் லவ்' என்ற நூலை ஹார்பர் காலின்ஸ் இந்தியா வெளியிடவுள்ளது.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த சுயசரிதை புத்தகம், 2026 நவம்பர் 10 அன்று இந்தியாவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## சென்னையில் டாக்டர். பி 360-ன் 'பேபி ஸ்கின் ஹேர்லெஸ் புரோகிராம்' பிரம்மாண்ட தொடக்கத்தில் பாரி இளவழகன், அர்ச்சனா ரவிச்சந்திரன், கிஷன் தாஸ், தீப்ஷிகா சந்திரன், பவியாத்ரிகா, ராணவ், இஸ்மத் பானு உள்ளிட்ட திரையுலக பிரபலங்கள் பங்கேற்பு!



சென்னை 05, செப்டம்பர் 2026: சென்னையில் நடைபெற்ற டாக்டர். பி 360-ன் 'பேபி ஸ்கின் ஹேர்லெஸ் புரோகிராம்' அறிமுக விழாவில், தமிழ் திரையுலகை சேர்ந்த பல பிரபலங்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். டெகா இத்தாலி நிறுவனத்தின் மேம்பட்ட Motus AZ+ லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தை, டாக்டர் பி 360 டெர்மட்டாலஜி எக்ஸ்பிரியன்சியல் செண்டரின் நிறுவனர் மற்றும் சரும நிபுணர் டாக்டர் பைரவி செந்தில் அறிமுகப்படுத்தினார். சருமப் பராமரிப்பில் பயாலஜி அடிப்படையிலான தனது அணுகுமுறையுடன், சர்வதேச அளவிலான லேசர் தொழில்நுட்பத்தை இணைத்து, தனிநபரின் தேவைக்கேற்ற சிகிச்சை முறையை இந்தத் திட்டம் வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சியில், 'ஜமா' திரைப்படத்தின் நடிகரும் இயக்குநருமான பாரி இளவழகன் மற்றும் பிக்பாஸ் தமிழ் சீசன் 7 வெற்றியாளர் அர்ச்சனா ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மேலும் கிஷன் தாஸ், தீப்ஷிகா சந்திரன், ஏஞ்சலின், பவியாத்ரிகா, ராணவ், இஸ்மத் பானு மற்றும் சுமித்ரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதன் மூலம் தமிழ் பொழுதுபோக்குத் துறை யைச் சேர்ந்த நடிகர்கள், தொலைக்காட்சி பிரபலங்கள் மற்றும் டிஜிட்டல் படைப்பாளர்கள் என பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்தில் திரண்டனர்.

நடிகர், இயக்குநர் பாரி இளவழகன் பகிர்ந்து கொண்டதாவது, "இந்த நிகழ்வு தனிப்பட்ட முறையிலும் எனக்கு முக்கியமானது. டாக்டர் பைரவி செந்திலிடம் சருமப் பராமரிப்பு சிகிச்சை பெற்று வருகிறேன். டாக்டர் பைரவியை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். சரும மருத்துவத் துறையில் எனக்கு இன்ஸ்பயரிங் அவர்தான். அவரது அணுகுமுறை, நோயாளிகளுக்கான அர்ப்பணிப்பு மற்றும் டாக்டர். பி 360-ஐ அவர் உருவாக்கிய விதம் அனைத்தும் பாராட்டுக்குரியவை" என்றார்.

இந்த நிகழ்வில் இத்தாலியைச் சேர்ந்த ஞிணிரிகி நிறுவனத்தின் ஃபிரான்சிஸ்கோ பாடியும் கலந்து கொண்டார். டாக்டர் பைரவி செந்திலின் பணிகள் குறித்தும், சரும மருத்துவத் துறையில் அவர் ஏற்படுத்தி வரும் தாக்கம் குறித்தும் அவர் பேசினார். மேலும், ஞிணிரிகி-வின் தொழில்நுட்பத்தை டாக்டர் பைரவியின் மருத்துவ அணுகுமுறையுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார். இதன் மூலம் இந்த அறிமுக நிகழ்வுக்கு சர்வதேச அளவிலான சிறப்பும் கிடைத்தது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் புரோகிராமின் முக்கிய அம்சமாக டெகா நிறுவனத்தின் Motus AZ+ மேம்பட்ட லேசர் தொழில்நுட்பம் இடம்பெற்றுள்ளது. அழகியல் மற்றும் சரும மருத்துவப் பயன்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த மேம்பட்ட லேசர் தளத்தை, டாக்டர் பி 360 தனித்துவமான சிகிச்சை அணுகுமுறையுடன் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு நபரின் சருமத்தின் பயாலஜி, சிகிச்சையின்போது வசதி மற்றும் தனிப்பட்ட தேவைகளைப் புரிந்துகொண்ட பின்னரே, அவர்களுக்கு ஏற்ற சிகிச்சை மற்றும் நீண்டகால பராமரிப்பு முறையைத் தீர்மானிப்பதே இதன் நோக்கம்.

"தொழில்நுட்பம் மட்டுமே முக்கியமானது அல்ல. ஒரு நபரின் தனிப்பட்ட தேவைகளுக்கும், அவரது ஸ்கின் பயாலஜிக்கும் ஏற்ப சரியான அனுபவத்தையும் சிகிச்சை முறையையும் உருவாக்கும்போதுதான் தொழில்நுட்பத்தின் உண்மையான மதிப்பு வெளிப்படுகிறது. டாக்டர் பி 360-ல் எங்களது அணுகுமுறை எப்போதும் முதலில் தோலைப் புரிந்துகொள்வது. அதன் பின்னர் சரியான தொழில்நுட்பம், சிகிச்சை மற்றும் பராமரிப்பு முறையைத் தேர்ந்தெடுப்பது. 'டாக்டர் பி பேபி ஸ்கின் ஹேர்லெஸ் புரோகிராம்' என்பது முன்பு நான் குறிப்பிட்டதன் தொடர்ச்சி" என்று டாக்டர் பைரவி செந்தில் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் அழகுப் பராமரிப்பு குறித்த சுவாரஸ்யமான கருத்துகளும் இடம்பெற்றன. நடிகர் கிஷன் தாஸ், தோல் பராமரிப்பு குறித்த தனது கருத்துகளை வெளிப்படையாகப் பகிர்ந்துகொண்டதுடன் டாக்டர் பி நிறுவனத்தின் சேவைகளைப் பயன்படுத்துவதில் தனக்கு உள்ள ஆர்வத்தையும் தெரிவித்தார்.

அவருடன் தமிழ் பொழுதுபோக்குத் துறையைச் சேர்ந்த பல இளம் மற்றும் பிரபலமான முகங்கள் பங்கேற்றது, இந்த நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்த்தது.

டாக்டர் பைரவி செந்தில் அவர்களால் 2025 ஜனவரி 19 அன்று தொடங்கப்பட்ட தி டாக்டர் பி 360 டெர்மட்டாலஜி எக்ஸ்பிரிமெண்டல் செண்டர் தோல், முடி, நலவாழ்வு மற்றும் நீண்ட நாள் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதோடு மட்டுமல்லாது 360 டிகிரி ஒருங்கிணைந்த சுகாதாரச் சூழலை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் இந்த அமைப்பில், இந்தியாவின் முதல் மெடிக்கல் கிரேடு சலூன் எனக் குறிப்பிடப்படும் பீவெல் மெடி சலூன் மற்றும் டாக்டர் பைரவியால் உருவாக்கப்பட்ட தோல் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையிலான AAVÉDERM ஸ்கின்கேர் மற்றும் நியூட்ராசூட்டிக்கல் பிராண்டும் இடம் பெற்றுள்ளன.

பீவெல் மெடி சலூன் தொழில்முறை சலூன் பராமரிப்பை இந்த ஒருங்கிணைந்த அமைப்புடன் இணைக்கிறது. அதேபோல், AAVÉ DERM மூலம் தோல் மருத்துவ நிபுணர்களால் உருவாக்கப்பட்ட ஸ்கின்கேர் மற்றும் நியூட்ராசூட்டிக்கல் தயாரிப்புகள் அன்றாட சுய பராமரிப்புக்குக் கொண்டுவரப்படுகின்றன. இதன் மூலம் டாக்டர் பி 360-ன் நோக்கம் மருத்துவச் சிகிச்சைகளைக் கடந்தும் விரிவடைகிறது.

தமிழ் திரையுலகைச் சேர்ந்த பல முன்னணி பிரபலங்களின் பங்கேற்பு, இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு கூடுதல் கவனத்தையும் சிறப்பையும் கொடுத்தது.

## எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சவ ஊர்வலத்தின்போது ஏற்பட்ட தகராறு காரணமாக கத்தியால் தாக்கிய நபர் கைது



சென்னை, 05 செப்டம்பர் 2026: சென்னை, எம்.ஜி.ஆர். நகர், சூளைப்பள்ளம், தாமரை விநாயகர் தெருவில் வசித்து வரும் விக்னேஷ், வ/29 என்பவர் கார் டீலராக வேலை செய்து வருவதாகவும், இவரது தூரத்து உறவினர் இறந்துவிட்டதால், விக்னேஷ், இவரது தம்பி கிஷோர் என்பவருடன் கடந்த 02.09. 2026 அன்று மாலை இறப்பு நிகழ்ச்சிக்கு சென்று, எம்.ஜி.ஆர். நகர், பச்சையப்பன் தெருவில் உள்ள சுடுகாடு அருகே சென்று கொண்டிருந்த போது, அங்கு ஆடிக்கொண்டிருந்த அப்பகுதியைச் சேர்ந்த முனுசாமி என்பவரின் கால் தம்பி கிஷோர் மீது பட்டதால், கிஷோர் பார்த்து ஆடுமாறு கூறியதாகவும், உடனே தகாத வார்த்தைகளால் பேசிய முனுசாமியை அருகிலிருந்தவர்கள் தடுத்து அனுப்பியதாகவும், பின்னர் இறுதி சடங்கு முடித்து, இரவு, விக்னேஷும் தம்பி கிஷோரும், எம்.ஜி.ஆர். நகர், வெங்கட்ராமன் சாலையில் உள்ள பேக்கரிக்கு சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த மேற்படி முனுசாமி இருவரையும் வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கியும், தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் கிஷோரின் தலையில் தாக்கியும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், இரத்தக்காயமடைந்த கிஷோர் இராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து விக்னேஷ் என்பவர் ஆர்-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி முனுசாமி, வ/24, சூளைப்பள்ளம், எம்.ஜி. ஆர். நகர், சென்னை என்பவரை நேற்று முன்தினம் (03.09.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி முனுசாமி மீது ஏற்கனவே 2024ம் ஆண்டு ஆர்-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையத்தில் ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி முனுசாமி விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (03.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## ஓட்டேரி பகுதியில் முன்விரோதம் காரணமாக கத்தியால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட 3 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் கைது







சென்னை, 05 செப்டம்பர் 2026: சென்னை, புரசைவாக்கம், பொன்னியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் அப்பன்ராஜ், வ/24 என்பவர் பெயிண்டிங் வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 02.09. 2026 அன்று இரவு, ஓட்டேரி, வெங்கடம்மாள் சமாதி வழியாக அவரது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்றிருந்த தெரிந்த நபர்களான பிரவீன், சஞ்சய் மற்றும் பரத் ஆகியோர் அப்பன்ராஜின் இருசக்கர வாகனத்தை வழிமறித்து, 'எதற்காக மாதா கோவில் ஊர்வலத்துல எங்ககிட்ட பிரச்சனை செய்தாய்?' எனக்கூறி தகாத வார்த்தைகளால் பேசி, அவர்கள் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தியால் அப்பன் ராஜை தாக்கியபோது, அப்பன்ராஜ் சத்தம் போடவே, சத்தம் கேட்டு பொதுமக்கள் வருவதை கண்ட 3 நபர்களும், கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், தாக்குதலில் இரத்தக் காயமடைந்த அப்பன் ராஜ் கேஎம்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து அப்பன்ராஜ் கொடுத்த புகார் மீது, பி-2 ஓட்டேரி காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற் கொண்டனர்.

பி-2 ஓட்டேரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.பிரவீன்குமார் (எ) பேனா, வ/22, சாலைமா நகர், பிரிக்ளின் ரோடு, புரசைவாக்கம், சென்னை 2.பரத், வ/22, வாசுதேவன் தெரு, புரசைவாக்கம், 3. சஞ்சய், வ/20, திரு.வி.க. தெரு, ஓட்டேரி ஆகிய 3 நபர்களை நேற்று முன்தினம் (03.09.2026) கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய ஒரு கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் ஜி-1 வேப்பேரி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், பிரவீன்குமார் மற்றும் பரத் மீது தலா 10க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளும், சஞ்சய் மீது 5 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும், விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (03.09.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.



தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி




## ‘வைல்ட் தமிழ்நாடு’ பிவிஆர் திரையரங்குகளில் வெளியாகிறது: தமிழ்நாட்டின் அரிய பல்லுயிர் சூழலை வெள்ளித்திரைக்குக் கொண்டுவரும் வனவிலங்கு ஆவணப்படம்!

சென்னை 05, செப்டம்பர் 2026: தமிழ் நாட்டின் காடுகளையும், இங்கு வாழும் உயிரினங்களையும் இதுவரைக்கும் நாம் பார்த்திராத கோணத்தில் கண்டுணர வைக்கும் ‘வைல்ட் தமிழ்நாடு’ ஆவணப்படம். செப்டம்பர் 7-ஆம் தேதி திங்கட்கிழமை முதல், தமிழ்நாடு முழுவதிலும் இருக்கும் பிவிஆர் சினிமாஸ் திரையரங்குகளில் இப்படம் வெளியாகிறது. தமிழ்நாட்டின் விதவிதமான நிலப்பரப்புகளையும், காட்டுயிர்களையும் பார்க்கும் ஒரு ஆழ்ந்த திரையரங்கு அனுபவத்தை இந்த ஆவணப் படம் ரசிகர்களுக்கு அளிக்கும்.

சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு சார்ந்த செயல்பாடுகளின் முன்னெடுப்பாக, ‘நேச்சர் இன்: ஃபோகஸ்’ நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாடு வனத்துறையின் ஆதரவோடு இந்த ஒரு மணி நேர ஆவணப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் நான்கு ஆண்டுகளாக பதிவு செய்யப்பட்ட காட்சிகளை ஒன்றிணைத்து, மலைகள், காடுகள், விளைநிலங்கள், கடற்கரைகள், பவளப்பாறைகள் மற்றும் வறண்ட நிலப்பரப்புகள் என தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் செழுமையையும் அதன் பல்லுயிர் பன்முகத்தன்மையையும் இந்த திரைப்படம் ரசிகர்களின் கண் முன்னே நிறுத்துகிறது.

பழந்தமிழ் சங்க இலக்கியத்தின் ஐந்திணைகளான குறிஞ்சி (மலைகள்), முல்லை (காடுகள்), மருதம் (விளைநிலங்கள்), நெய்தல் (கடற்கரைகள்) மற்றும் பாலை (வறண்ட நிலங்கள்) ஆகியவற்றின் பின்னணியில் உருவாக்கப்பட்டுள்ள ‘வைல்ட் தமிழ்நாடு’, இந்த மாறுபட்ட இயற்கை சூழல்களில் வாழும் வனவிலங்குகளை நேர்த்தியாக படம் பிடித்திருக்கிறது. யானைகள் மற்றும் சிறுத்தைகள் போன்ற பரிச்சயமான விலங்குகளுடன், செங்குரங்கு (Lion-tailed macaque), மின்மினிப் பூச்சிகள் மற்றும் அரிதாக மட்டுமே கண்ணில் தென்படும் மெட்ராஸ் முள்ளெலி (Madras hedgehog) உள்ளிட்ட உயிரினங்களின் வாழ்க்கையையும் இந்த ஆவணப்படம் திரையில் நேரடி அனுபவம் போல உணரச் செய்கிறது.




‘வைல்ட் தமிழ்நாடு’ படத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்:

இயக்கம்: இயற்கை மற்றும் வனவிலங்கு ஆவணப்பட இயக்குநர் கல்யாண் வர்மா இதை இயக்கியுள்ளார்.

பின்னணிக் குரல்: பிரபல நடிகர் அரவிந்த் சுவாமி தனது கம்பீரமான குரலில் வண்ணனை (Narration) செய்துள்ளார்.

இசை: மூன்று முறை கிராமி விருது வென்ற ரிக்கி கேஜ், கர்நாடக இசையையும் மேற்கத்திய வாத்தியங்களையும் நேர்த்தியாக இணைத்து இசையமைத்துள்ளார்.

ஒளிப்பதிவு: தென்னிந்தியாவைச் சேர்ந்த திறமையான ஒளிப்பதிவாளர்கள் குழுவினர் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து களத்தில் தங்கி காட்சிகளைப் பதிவு செய்துள்ளனர்.

திரைப்படம் மற்றும் அதன் பரவலான திரையரங்கு வெளியீடு குறித்து சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ஆரத்தி கிருஷ்ணா பேசுகையில், “நமது இயற்கை பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாக்கும் இதுபோன்ற சிறந்த முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ் லிமிடெட் பெருமிதம் கொள்கிறது. தமிழ்நாட்டின் வனப் பகுதிகளின் எழிலையும், அதன் பல்வேறு நிலப் பகுதிகளில் காணப்படும் அச்சரிய மூட்டும் பல்லுயிர் சூழலையும் ‘வைல்ட் தமிழ்நாடு’ ஆவணப் படம் மிக நேர்த்தியாகப் படம் பிடித்துள்ளது. பிவிஆர் திரையரங்குகள் வாயிலாக இந்த ஆவணப் படத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலம், இந்த கதைகள் அனைவரையும் எளிதில் சென்றடையச் செய்வதோடு, இயற்கை உலகின் மீது ஆழ்ந்த அன்பையும், அதைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் மக்களிடையே உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்,” என்றார்.

இயக்குநர் கல்யாண் வர்மா இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த ஆவணப்படம், தமிழ் நாட்டின் இயற்கை பாரம்பரியத்தை ஒரு சினிமா அனுபவமாக வழங்குவதற்காக பல ஆண்டுகள் காடுகளிலும், மலைகளிலும், பல்வேறு நிலப்பகுதிகளிலும் இரவுபகல் பாராமல் களத்தில் நின்று எடுக்கப்பட்ட காட்சிகளை ஒன்றிணைத்துள்ளது. பிவிஆர் திரையரங்குகளில் வெளியாகும் இந்த திரைப்படம், தமிழகத்தின் இயற்கை அழகையும் வனவிலங்குகளையும் எழில்மிகு நிலப்பகுதிகளையும் நேரடியாக பார்க்கும் அனுபவத்தை வெள்ளித் திரை மூலம் உணரச் செய்கிறது.


பிவிஆர் திரையரங்குகளில் வெளியாகும் ‘வைல்ட் தமிழ்நாடு’, காடுகள் மற்றும் மலைகள் தொடங்கி கடற்கரைகள் மற்றும் வறண்ட நிலங்கள் வரை தமிழ்நாட்டின் அடங்கியிருக்கும் பல்வேறு இயற்கை உலகங்களை பார்வையாளர்கள் அறிந்து கொள்ள ரசிகர்களை அழைக்கிறது. மாபெரும் திரை இணையும் இயற்கை பாரம்பரியத்தை, திரையரங்குகளுக்கே உரிய பிரம்மாண்டத்துடனும் நேரடி அனுபவத்துடனும் உணரும் வகையில் ‘வைல்ட் தமிழ்நாடு’ ஆவணப் படம் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## ஏழு வயதே ஆகும் ரூஹி மொஹஸ்ஸாப் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவரை சந்தித்தார்!

திருவனந்தபுரம் 05, செப்டம்பர் 2026: கோழிக்கோட்டைச் சேர்ந்த 7 வயது சுற்றுச்சூழல் ஆர்வலரான ரூஹி மொஹஸ்ஸாப், ஐக்கிய நாடுகள் சபையின் உலகிலேயே இளவயது உரையாளர், இளவயது சுற்றுச்சூழல் ஆர்வலர் மற்றும் காலநிலை நடவடிக்கை செயற்பாட்டாளர் என்ற சிறப்புகளைப் பெற்றுள்ளார். இவர் திருவனந்தபுரத்தில் உள்ள லோக் பவனில் இந்தியாவின் மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் சி. பி. ராதா கிருஷ்ணன் அவர்களை சந்தித்தார்.






மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் ரூஹியை அன்புடன் வரவேற்றார். மரங்களைப் பாதுகாத்தல், காகிதத்தைச் சேமித்தல், மறுசுழற்சி, காலநிலை மீதான அக்கறை மற்றும் குழந்தைகளின் சுற்றுச்சூழல் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் அவரது முயற்சிகள் குறித்து மிகுந்த ஆர்வத்துடன் கேட்டறிந்தார். ரூஹி தனது 'காகிதத்தைச் சேமிப்போம்! மரங்களைப் பாதுகாப்போம்!! பூமியைக் காப்போம்!!! என்ற செய்தியை அவரிடம் எடுத்துரைத்ததுடன், குழந்தைகள் மற்றும் பள்ளிகள் பயன்படுத்திய காகிதங்களைச் சேகரித்து மறுசுழற்சி செய்ய ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'ரூஹியின் பேப்பர் பேங்க்' குறித்த தனது தொலைநோக்குப் பார்வையையும் பகிர்ந்து கொண்டார்.

குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் ரூஹிக்கு அன்புடன் சாக்லேட்டுகளை வழங்கியதுடன், அவரது முயற்சியைப் பாராட்டி, “மனிதகுலத்தின் மீதான உங்களது அக்கறை அசாதாரணமானது. இறைவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்! எப்போதும் நல்ல சிந்தனையுடன் தொடர்ந்து செயல்படுங்கள்” என்று தனது கையெழுத்துடன் பாராட்டு செய்தியைப் பதிவு செய்தார். மேலும், ரூஹி வழங்கிய மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதத்தால் தயாரிக்கப்பட்ட குறிப்பேட்டிலும் அவர் கையெழுத்திட்டார். ரூஹி வழங்கிய செடி தொட்டியையும், நேபாள மக்கள் மீதான அக்கறை மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் அவர் வரைந்த ஓவியத்தையும் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குழந்தைகள், மரங்கள் மற்றும் சமூகம் எதிர்கொண்ட பாதிப்புகளால் ஆழமாகப் பாதிக்கப்பட்ட ரூஹி, தனது அக்கறையை செயல்பாடாக மாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள குழந்தைகளுக்கு ஆதரவளித்து, மரங்களை நடுதல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதில் பங்கேற்க வேண்டும் என்பதே ரூஹியின் விருப்பமாக உள்ளது. அக்கறை, மறுசீரமைப்பு மற்றும் நம்பிக்கையை தனது செயல்பாடுகள் மூலம் எடுத்துச் செல்ல அவர் விரும்புகிறார்.

ரூஹியின் தொலைநோக்குப் பார்வை தற்போது மரங்களைப் பாதுகாப்பதைத் தாண்டி, குழந்தைகள் முன்னெடுக்கும் காலநிலை மீதான அக்கறை, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அமைதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு இயக்கமாக விரிவடைந்து வருகிறது. காடுகள், நீர், பல்லுயிர் வளம், பொறுப்பான நுகர்வு மற்றும் மனிதகுலம் அனைவருக்கும் பொதுவான பூமியின் வளங்களைப் பாதுகாப்பது ஆகியவை இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கங்களாக உள்ளன. மனிதகுலம் அமைதியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய வளங்களைப் பாதுகாக்க வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் ஒன்றிணைந்து செயல்பட முடியுமா என்பதே அவர் சொல்ல வரும் செய்தி.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், தலைமுறைகளையும் நாடுகளின் எல்லைகளையும் கடந்து ஒத்துழைப்பு, அக்கறை மற்றும் அமைதிக்கான பாதையாக அமைய முடியும் என்று ரூஹி நம்புகிறார். அவரது கனவு எளிமையானது: “காகிதத்தைச் சேமிப்பதும், மரங்களைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு குடிமகனும் பகிர்ந்து கொள்ள வேண்டிய பொறுப்பாக மாற வேண்டும் என்பதே எனது கனவு.”

மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவருடனான இந்த சந்திப்பு, தனது செய்தியை ஒரு குழந்தையிடமிருந்து கோடிக்கணக்கான குழந்தைகளிடம் கொண்டு செல்லவும், ஒரு சிறிய செயலிலிருந்து தாய் பூமிக்கான மிகப்பெரிய இயக்கமாக மாற்றவும் ரூஹியின் உறுதியை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஒரு குழந்தையின் குரல் கேட்கப்படும்போது, ஒரு கனவு இயக்கமாக மாறும் என்கிறார் ரூஹி.

காகிதத்தைச் சேமிப்போம்! மரங்களைப் பாதுகாப்போம்!! பூமியைக் காப்போம்!!!

## குடியரசு துணைத்தலைவர் சி பி ராதா கிருஷ்ணன் சென்னை வருகிறார்

சென்னை 05, செப்டம்பர் 2026: குடியரசுத் துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், நாளை (2026 செப்டம்பர் 5), சென்னைக்கு ஒரு நாள் பயணம் மேற்கொள்கிறார். தமது பயணத்தின் போது, குடியரசு துணைத் தலைவர், இதய நோய்களுக்கான சிகிச்சையை மேம்படுத்துவதற்கான தேசிய கல்விசார் மாநாடான 'இந்தியா வால்வ்ஸ் 2026'-ல் பங்கேற்பதுடன், சென்னை கிண்டியில் இந்திய வால்வு பதிவகத்தையும் தொடங்கி வைக்கிறார். தினமலர் நாளிதழின் 75 ஆண்டுகள் நிறைவையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறவுள்ள நினைவு



அஞ்சல் தலை வெளியீட்டு விழாவிலும் திரு சி பி ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.